# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2738/E/2020**

திரு.சி.குருசிரோண்மணி ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

மேல்முறையீட்டாளர் 26.06.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 18.03.2019 தேதியிட்ட மேல்முறையீட்டாளரின் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம், சிவகங்கை நில அளவை அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட அளவை பட்டாவில் "குருசாமி கோவில் (டிரஸ்டி) சேமாதுவிற்குப் பாத்தியப்பட்ட ஆறு (6) கடைகளுக்கு யார் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பட்டாக்கள் அனைத்தும் சமாதுவின் (கோவிலின்) நீதிமன்ற வழக்குகளிலும் தாக்கல் செய்யப்பட்டு சமாதுவின் (கோவிலின்) உரிமை நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்றும், தற்சமயம் மேற்படி பட்டாக்கள் மாற்றம் செய்யப்பட்டு "குருசாமி கோவில் டிரஸ்டி" என பட்டாவும், (பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது) மேற்படி

கோவில் சமாதுவின் டோர் நீர் 301க்குப் பதிலாக 300 எனவும், தெருப்பெயர் 'அம்பலப்புளி பஜார்' என்பதற்கு பதிலாக "துரைச்சாமிபுரம் தெரு" எனவும் மாறுதலாகப் பதிவு செய்து இருப்பது 15.03.2019 அன்று ONLINE மூலம் எடுக்கப்பட்ட நகல் மூலமாக காலஞ்சென்ற சிவகுருநாதன் பூசாரியின் வாரிசு என்பது தெரியவந்ததாகவும், எந்த ஒரு மனுவின் பெயரால் ஆவணத்தைச் சான்றாக அடிப்படையாக வைத்து மேற்படி பட்டாவில் பெயர் நீக்கம், டோர் நீர் மாற்றம், தெருப்பெயர்மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம், எந்த தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம், தெருவின் பெயர் நகராட்சி ஆவணத்தில் 'அம்பலப்புளி பஜார்' என்றிருக்கையில் 'துரைச்சாமிபுரம் தெரு' என்று எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் உள்ளிட்ட தகவல்களைக் கோரியதன்பேரில், பொதுத் தகவல் அலுவலர் தனக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை என்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் 22.11.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். தொடர்ந்து 02.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்த மேல்முறையீட்டாளர்களின் மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட்ட நிலையில், இராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் 23.09.2020 தேதியிட்ட கடிதத்தில் தகவல்களை பதிவஞ்சலில் அனுப்பியுள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகைச் சீட்டின் நகலை இணைத்து அனுப்பி வைத்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய தகவலை இவ்வாணையம் ஏற்கவில்லை. ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் வழங்கப்பட வேண்டிய தகவல் என்றே ஆணையம் தீர்மானித்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் 26.06.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளர் 26.06.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை குறிப்பிட்ட நாட்களுக்குள் வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படுமென்பது தெரிவிக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 2738/E/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு.சி.குருசிரோன்மணி,
த/பெ.சிவகுருநாதன் பூசாரி,
எண்.2909, 22வது மெயின் ரோடு,
6வது கிராஸ், விஜய் நகர்,
2வது ஸ்டேஜ்,
(விஜய நகர் காவல் நிலையம் அருகில்)
மைசூர் - 570 017
கர்நாடகா மாநிலம்.

Copy to: Judgement File.
*"VP / PA -09.11.2020"*